# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 34/2008 and OS.No. 195/2010 Date:24.09.2025**

**(DW1)- லட்சுமி**

**1** ம் வாதி தரப்பு குறுக்கு விசாரணை

1. Original Suit No.34/2008 and OS.No. 195/2010 ஆகிய இரண்டு வழக்குள் பற்றிய விவரங்கள் மற்றும் அதில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றிய விவரங்களை குறித்து என்னால் பதிலளிக்க முடியும் என்றால் முடியும். என்னிடம் காட்டப்படும் பிவாசாஆ. 1 ஆவணத்தில் உள்ள 3 வது கையெழுத்து எனது சகோதரர் ஸ்ரீகிருஷ்ணனின் கையெழுத்து என்றால் சரிதான். எனது சகோதரர் ஸ்ரீகிருஷ்ணன் என்ன படித்துள்ளார் என்றால் 10 ம் வகுப்பு படித்துள்ளார்.

2. எனது சகோதரர் பிவாசாஆ. 1 ஆவணத்தில் இருப்பது போல் தான் எப்போதும் கையெழுத்து செய்வார் என்றால் சரிதான். எனக்கு எதிராகவும் எனது கணவருக்கெதிராகவும் குற்றவியல் நீதிமன்றத்தில் 3 வழக்குள் நடைபெற்றது என்றால் சரிதான், தற்போது முடிவடைந்து விட்டது. எனது அம்மாவும் நானும் ஒரு வழக்கில் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு படிப்பறிவு கிடையாது என்றாலும் அவருக்கு கையெழுத்திட தெரியாது என்றாலும் கைரேகை தான் வைப்பார்கள் என்றாலும் சரிதான்.

3. எனது பெயரிலுள்ள உயில் ஆவணத்தை எழுத எழுத்தாளரை நியமித்தது யார் என்றால் எனது தாயார் தான் ஏற்பாடு செய்தார். மேற்படி எழுத்தாளருக்கான ஊதியத்தை யார் கொடுத்தாகள் என்றால் எனது அம்மா தான் கொடுத்தார். உயில் ஆவணம் எழுதிய பின்பு மேற்படி ஆவ ணம் என் கைவசம் எப்போது கிடைத்தது என்றால் எழுதிய உடன் எனது அம்மாவிடம் இருந்தது, நானும் எனது அம்மாவும் ஒரே வீட்டில்தான் வசித்தோம்.

4. உயிலை எழுதியவுடன் நான் படித்து பார்த்தேனா என்றால் நானும் எனது அம்மாவும் படித்து பார்த்தோம். மேற்படி உயிலில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்றால் ஞாபகமில்லை. உயில் எழுதிய பிறகு எனது அம்மா எவ்வளவு காலம் உயிரோடு இருந்தார் என்றால் சுமார் 4 வருடம் உயிரோடிருந்திருப்பார். மேற்படி 4 வருடமும் நானும் எனது அம்மாவும் ஒன்றாக தான் வசித்தோம் என்றால் சரிதான். எனது அம்மாவிற்கான தேவைகள் மற்றும் செலவுகளை நான் தான் பார்த்து கொண்டேன் என்றால் நானும் எனது அண்ணன்களும் ஏற்று கொண்டோம்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக 08.10.2025 தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

( ஒப்பம் )

மாவட்ட உரிமையியல் நீதிபதி

இரணியல்